DEPOSITION OF WITNESS
IN THE I ADDITIONAL DISTRICT COURT (PCR),
TIRUCHIRAPPALLI.
**Spl.S.C.No. 29/2024**
**P.W.** 13

| | | |
|---|---|---|
| Name | : | **திரு. என்.ராமநாதன்** |
| Father's Name | : | **திரு. நடேசன்** |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 62 |

(Accused 1 and 2 are present. A3 and A4 are absent. Petition filed and allowed.)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 15th day of June 2026.

**முதல் விசாரணை**

நான் காவல் துறையில் துணை காவல் கண்காணிப்பாளராக பணியாற்றி பணி நிறைவு பெற்றுள்ளேன். கடந்த 01.12.2025 அன்று மணப்பாறை உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளராக பணியில் இருந்த போது திருச்சி மாவட்ட திருச்சி மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் அவர்களின் செயல்முறை நடவடிக்கை C.No.83/SJ&HR/PROCEEDINGS/TRI/2022 நாள்.01.12.2022 ன்படி இந்த வழக்கை எனது புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். திருச்சி மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் அவர்களின் செயல்முறை நடவடிக்கை C.No.83/SJ&HR/PROCEEDINGS/TRI/2022 நாள்.01.12.2022 **அரசு தரப்பு சான்றாவணம்.8** ஆகும்.

நான் கடந்த 01.12.2022 அன்று சுமார் 15.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் பத்தியநாதன் மற்றும் பொன்னுசாமி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு சம்பவ இடத்தைக் குறிக்கும் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகசர் **அரசு தரப்பு சான்றாவணம்.9** ஆகும். அந்த மாதிரி வரைபடம் **அரசு தரப்பு சான்றாவணம்.10** ஆகும்.

அன்றே சாட்சிகள் செல்வி, சுப்பிரமணி, சந்திரசேகரன், பாஸ்கர், செல்வராஜ், செந்தில், பழனியப்பன் மற்றும் பார்வை மகசர் சாட்சிகள் பத்தியநாதன் மற்றும் பொன்னுசாமி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சம்பவ இடத்தை பார்வையிட்டதில் இருந்தும், சாட்சிகளை விசாரணையில் இருந்தும் சம்பவம் உண்மையென தெரியவந்ததால் எதிரிகளை தேடி வந்த நிலையில் எதிரிகள் தலைமறைவாகிவிட்டார்கள். பின்பு இவ்வழக்கில் எதிரிகள் மற்றும் நிகழ்நிலைப் புகார்தாரர், அவரது உறவினர்களின் சாதிச் சான்று மெய்த் தன்மை சான்று வழங்க கேட்டு மணப்பாறை வருவாய் வட்டாட்சியருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். இவ்வழக்கில் காயம்பட்ட நபர்களுக்கு சிகிச்சையளித்து விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று வழங்கிய டாக்டர். வெங்கடேஷ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

சாதிச் சான்று மெய்த் தன்மை சான்று வழங்கிய மணப்பாறை வருவாய் வட்டாட்சியர் தனலெட்சுமி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் ஆரோம் ஜென்ம ராகினி என்பவரை 09.02.2023 அன்று விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு 10.02.2023 ம் தேதி இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை மாறுதல் செய்து அறிக்கை அனுப்பினேன். சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அரசு தரப்பு சான்றாவணம்.11** ஆகும். விசாரணை முடித்து எதிரிகள் மீது 28.02.2023 அன்று குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன். என் விசாரணையின் போது சாட்சிகள் பழனியப்பன், செல்வராஜ் மற்றும் செந்தில் ஆகியோர்கள் சம்பவத்தை நேரில் கண்ணுற்றதாக கூறினார்கள். சாட்சிகள் பத்தியநாதன் மற்றும் பொன்னுசாமி நான் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயாரித்த போது உடன் இருந்து பார்வை மகசரில் கையொப்பம் செய்ததை கூறினார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

செல்வி கொடுத்த புகாரில் சாதி குறித்து இழிவாக பேசியதாக குறிப்பிட்டுச் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். எதிரிகள் கொடுத்த புகாரின் அடிப்படையில் செல்வி மற்றும் சுப்பிரமணியன் தரப்பினர் மீது குற்ற எண் 392/2022 என ஒரு குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த குற்ற வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக இந்த வழக்கில் கண்ட நிகழ்நிலை புகார்தாரர் பொய்யான ஒரு புகாரை இந்த வழக்கின் எதிரிகள் மீது கொடுத்தார் என்றும் அதன் அடிப்படையில் நாங்கள் பொய் வழக்கு பதிவு செய்தோம் என்று சொன்னால் சரியல்ல. நான் சரிவர புலன் விசாரணை மேற்கொள்ளவில்லை

www

என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.),XXXXX,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

Web Copy